# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 31 சனிக்கிழமை 13.04.2024 கதிர் 158


## தேர்தல் முறையை திருத்துவதற்கான ஆணைக்குழுவினது காலம் நீடிப்பு

தேர்தல் முறையை திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் ஜூன் 15 வரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்திர குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

☞ 2

### இது ரகசியம் அல்ல!

தமிழ்பொதுவேட்பாளர் ஒருவரை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்நிறுத்துவது தொடர்பாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனால் நேற்று அவரது இல்லத்தில் கூ-ட்டப்பட்ட கூட்டம் சோபஇழந்திருந்தது. அவரைத்தவிர இந்தக் கூட்டத்தில் வேறு அரசியல்வாதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை. பல்வேறு காரணங்களால் ஏனைய அரசியல்வாதிகளால் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டதாகக் கூறிச் சமாளித்தார் விக்னேஸ்வரன். செல்வம் அடைக்கலநாதன் வெளிநாட்டில் உள்ளார் என்றும் சிறீதரனுக்கு வர விருப்பம் இருந்தது என்றாலும் இரண்டு அரசியல் கூட்டங்கள் இருந்ததால் வர முடியவில்லை என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் வருவதாகக் கூறினார் என்றாலும் ஏனே அவராலும் வரமுடியாமல் போய்விட்டது என்றும் விளக்கம் கூறினார்.

இதைக் கேட்டதும் எனக்கென்னவோ மோடிக்குக் கடிதம் எழுத்த இவர்கள் எல்லோரும்

☞ 2

## நீரில் மூழ்கி கைவேலியில் 57 வயது நபர் உயிரிழப்பு

புதுக்குடியிருப்பு, கைவேலியில் வீதிப் பாலத்திற்கு கீழே தேங்கி நிற்கும் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

பாலத்திற்கு கீழே சுமார் பத்து அடி பள்ளத்தில் தேங்கி நிற்கும் தண்ணீரில் குளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தவரான முனிசாமி திருச்செல்வம் (வயது 57) உயிரிழந்தார். இவர் தேவிபுரம் பகுதியில்

நேற்றும் அங்கு குளிக்கச்சென்ற அவர் நீரில் மூழ்கி இறந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தை உடல்கூறாய்வுகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்ப உத்தரவிட்டார்.

☞ 2

ஜனாதிபதித் தேர்தலில்

## பெரமுனவின் ஆதரவின்றி எவரும் வெல்ல முடியாது

குட்டியாராச்சி எம்.பி. தெரிவிப்பு

பொது ஜன பெரமுனவின் ஆதரவின்றி ஜனாதிபதித் தேர்தலில் எவரும் வெற்றிபெற முடியாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாரச்சி தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் களமிறங்கும் வேட்பாளரால் மட்டுமே வெற்றிபெற முடியும் என்பதுதான் யதார்த்தமான விடயமாகும்.

அந்த வகையில் பொது ஜன

☞ 2

## சீன அரசின் உதவியினாலான வீட்டுப் பணி ஜூனில் தொடக்கம்

சீன அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப்பணிகள் ஜூன் மாதம் தொடங்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சத்யானந்தா குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த வீடுகளின் நிர்மாணப் பணிகளை சீன நிறுவனங்கள் மேற்கொள்ளவுள்ளன. கொட்டாவ, மஹறகம, பேலியகொட, தெமட்டகொட, மொரட்டுவை

☞ 2

## பொது வேட்பாளருக்கு சிறீதரன் கொள்கையளவில் இணக்கம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு தனக்கும் கொள்கையளவில் இணக்கம்தான் என்று தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்குப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக்

☞ 2

## கோட்டாபயவைப் பதவி நீக்கும் சதி பற்றி விசாரிக்க ஏன் ஆணைக்குழு இல்லை?

கேள்வி எழுப்புகிறார் ஓமல்பே சோபித தேரர்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை பதவி நீக்கிய சதி தொடர்பில் ஏன் விசாரணை ஆணைக்குழுவை இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமிக்கவில்லை என்று ஓமல்பே சோபித்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எம்பிலியப்பிட்டியவில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ரஜபக்சவினால் வெளியிடப்பட்டுள்ள 'ஜனாதிபதி பதவிலியிலிருந்து என்னை நீக்குவதற்கான சதி' என்றும் நூலில் 97ஆவது மற்றும் 98ஆவது பக்கங்களில் என்னைப் பற்றிய சில விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டிலிருந்து வெளியேறும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சதி சம்பந்தமாக தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு கருத்துக்களை தெரிவிக்க முடியும். அவரால் அது பற்றிய விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஆணைக்குழுவினை நியமிக்க முடியும் ஏன் அந்த விடயங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

அதே நேரம், கோட்டாபய ராஜபக்சவுக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டிருந்த தருணத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக வெளியேறுவதற்கு நான் தலையீடுகளைச் செய்திருந்தேன் என்று அவர் நன்கு அறிவார். அவருடன் பிரத்தியேக செயலாளராக இருந்த சுகீஸ்வர பண்டார போன்ற குழுவினரும் அறிவார்கள்.

☞ 2

## செம்மணியில் கிரிக்கெட் மைதானம்: அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆராய்வு

யாழ். செம்மணி பகுதியில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட மைதானங்களை அமைப்பதற்கான ஏதுநிலைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளுடன் அங்கு நேரில் சென்று நேற்று ஆராய்ந்தார்.

யாழ்ப்பாணத்தை வரவேற்கும் செம்மணி வளைவு பகுதியை அண்டிய நிலப்பரப்பில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட மைதானங்களை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை நகர அபிவிருத்தி அதிகார சபை முன்வைத்துள்ள நிலையில் அதற்கான

☞ 2

## வளங்களை விற்பதையே சிந்திப்போர் தே.ம.ச. பற்றி பேசுவது வெட்கக்கேடு

ஜேவிபியின் சுனில் ஹந்துன்நெத்தி சாடல்

நாட்டின் வளங்களை விற்பது குறித்துச் சிந்திக்கும் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை குறித்துப் பேசுவது வெட்கக்கேடானது என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக்

☞ 2

பல கோரிக்கைகளை முன்வைத்து

## குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம்

இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள உறுப்பினர்கள் 'கருப்பு பட்டி அணிந்து' தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் செயற்படும் அனைத்து விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் குறிப்பாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளும் இந்த நேற்று இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடிவரவுத் திணைக்களத்தில் அதிகாரிகள் பற்றாக்குறை, உரிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பாமை, ஷிப்ட் முறை மாற்றம், நிரந்தர விசா கொள்கை இல்லாத காரணத்தினால் சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் நாட்டிற்குள் நுழையும் சர்வதேச கடத்தல் காரர்கள், வெளிநாட்டு தனியார் நிறுவனம் விசா விண்ணப்

☞ 2

## கொரேனா தொற்று ஏற்பட்டு குருநாகலில் ஒருவர் இறப்பு

நீண்ட நாட்களுக்குப் பிறகு, குருநாகல் போதனா வைத்தியசாலையில் கொவிட்-19, கொரோனா தொற்று காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிகிச்சைபெற்றுவந்த நோயாளி ஒருவர் திடீரென உயிரிழந்ததை அடுத்து சந்தேகத்தின் பேரில் நடத்தப்பட்ட பிசிஆர் (PCR) பரிசோதனையில், கொவிட்-19 வைரஸ் தொற்றுக் காரணமாக இறப்பு ஏற்பட்டமை தெரியவந்துள்ளது.

தடுப்பூசி

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஒன்றுகூடிய கதைதான் மீண்டும் நினைவுக்கு வந்தது. தமிழர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதப்போவதாக இப்படித்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில்உள்ளதலைவர்களும் விக்கினேஸ்வரனும் கூடிப் பேசினார்கள். கடிதத்தை எழுதுவது குறித்து இணக்கத்துக்கும் வந்தார்கள். அதற்கான வரைபைக்கூட விக்னேஸ்வரன் தயாரித்திருந்தார். தலைவர்கள் அந்தக்கடிதத்தில்கையெழுத்திட்டதும் அதனை மோடிக்கு அனுப்பி விடலாம் என்றும் அவர் பல தடவைகள் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். ஆனால், கடைசிவரையில் அந்தக் கடிதத்தில் தலைவர்கள் ஒப்பமிடவே இல்லை. அவர்களில் ஒரு தலைவர் இதோ வருகின்றேன், இதோவருகின்றேன் என்று நாட்களைக் கடத்திச் செல்ல கடைசியில் அந்தக் கடிதமே காணாமற்போய்விட்டது.

அதுமட்டுமல்ல, அந்தக்கடிதத்தை எழுதுவதற்கும் பிரதமர் மோடிக்கு அனுப்புவதற்கும் விக்னேஸ்வரனுடனான சந்திப்பில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இணக்கம்தெரிவித்துவிட்டுச் சென்றபின்னர், அதுபற்றிக்கருத்துத் தெரிவித்தஅவரதுகட்சியின்மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம், கடிதத்தில் கையெழுத்து வைத்த பின்னர் விக்னேஸ்வரன் தனது தலைமையில்தான் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்கும் குழுச் செல்லவேண்டும் என்று சொல்லுவார், அது ஏற்புடையதல்ல என்ற சாரப்பட வவுனியாவில் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆக மொத்தத்தில் யார் யாருக்குத் தலைவர் என்பதில்தான் இந்தத் தலைவர்களின் பிரச்சினையே இருக்கின்றது.

இப்போது, பொது வேட்பாளர் விடயத்திலும் இதுபோன்ற காட்சிகளே கட்டவிழ்கின்றன என்றுபடுகின்றது. இந்தவிடயத்தை முதலில் பொது வெளியில் பேசத் தொடங்கியது. ஜனநாயகக் கூட்டணிதான். அதிலும் சுரேஸ் பிரேமச்சந்திரன்தான் அது குறித்துப் பேசினார். அது குறித்து ஜனநாயகக் கூட்டணியும் கூடி ஆராய்ந்து கொள்கையளவில் இந்த முடிவை ஆதரிப்பது என்று தீர்மானித்தது. விக்னேஸ்வரன் பொது வேட்பாளர் என்கிற யோசனைக்கு ஆதரவு தெரிவித்தார். அது மட்டுமல்ல, பொது வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்றும் அறிவித்தார். சில நாட்களுக்கு முன்னர்கூட தானே பொது வேட்பாளருக்குத் தகுதியானவர் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தார். அப்படியிருந்தும் ஜனநாயகக் கூட்டணியினர் அவருடன் இது பற்றிப் பேச்சு ஏதும் நடத்தவில்லை. அவரைப் பொது வேட்பாளராக அவர்கள் அறிவிப்பதற்கான அறிகுறியும் தென்படவில்லை. மற்றொ-ரு பக்கத்தில் அரசியல்வாதியே அல்லாத பொதுவான ஒருவரையே, அதாவதுதமிழ்மக்கள்அனைவரும் ஆதரிக்கக் கூடிய பொது நபர் ஒருவரையே பொது வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

பொறுத்துப்பார்த்தார்விக்னேஸ்வரன். இனியும் பொறுக்க முடியாது என்று, அவசர அவசரமாகத் தானே ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். பொது வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்கானஒருகுழுவை அமைக்கும் கூட்டம். நேற்றைய அந்தக்கூட்டத்தில் அரசியலாளர்கள் கலந்துகொள்ளவில்லை என்றாலும், வந்திருந்த ஒரு சிலருடன் பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கானகுழுஒன்றுஅமைக்கப் பட்டுவிட்டது. அதாவதுபொதுவேட்பாளரை இனி அந்தக் குழுதான் முடிவு செய்யுமாம். இந்தமுதலாவதுகூட்டம் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை என்றாலும் விக்னேஸ்வரன் இது விடயத்தில் தொடர்ந்து தீவிரமாகச் செயலாற்றுவார் என்கின்றனஅவருக்குநெருக்கமான வட்டாரங்கள்.

கூட்டம் முடிந்த பின்னர் அது குறித்து விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

பொது வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாட நாங்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். அதிலே சிவில் சமூகத்தினர் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்பங்குபற்றினார்கள். ஆனால் பலவித காரணங்களால் அரசியல் தலைவர்களால் வர முடியாமல் போய்விட்டது.

சிறிதரன் இங்கு வருவதற்கு விருப்பத்தோடு இருக்கிறார் எனவும் எனினும்வவுனியாவில்ஒருகூட்டம் மற்றும்கிளிநொச்சியில் ஒரு கூட்டம் இருப்பதாகவும் சொல்லியிருந்தார். செல்வம் அடைக்கலநாதன் வெளிநாடு சென்றிருக்கின்றார். சுரேஸ் பிரேமச்சந்திரன் வருவதாக கூறினார். ஆனாலும் அவராலும் வர முடியாமல் போனது. இவ்வாறான சில பிரச்சனைகள் இருந்ததால் அரசியல்வாதிகள் அதிகம் வரவில்லை. நான் மட்டும்தான் ஓர் அரசியல்வாதியாக இருந்தேன். ஆனால் சிவில் சமூகத்தினர், ஊடகத்தினர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் இங்கே வந்திருந்தார்கள்.

வந்திருந்தவர்களிடத்தே பொது வேட்பாளர் சம்பந்தமான கருத்துக்களை நாங்கள் கேட்டறிந்தோம். வந்திருந்த எல்லோருமே பொது வேட்பாளரை நிறுத்துவதன் அவசியம் தற்போது தமிழ் மக்களுக்கு இருக்கிறதென்பதைக்கூறி அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

இனி அடுத்த கூட்டத்திலே நாங்கள் கூடி இதிலே அரசியல் தலைவர்களையும் சேர்த்துக் கொண்டு அதிகளவிலான சிவில் சமூகத்தினரையும் இணைத்துக்கொண்டு அதாவது தமிழ் மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடியவர்களையும் உள்வாங்கி அவர்களினூடாக இது சாத்தியமான விடயமா, இதைச் செய்வதற்கு எல்லோரும் ஆதரவு தருவார்களா என்ற பல விடயங்களையும் பேசவிருக்கின்றோம்.

இந்த முயற்சியின் ஆரம்ப கட்டமாக ஒரு சில விடயங்களை நாங்கள் பேசியிருக்கின்றோம். குறிப்பாக நாங்கள் யாரோ ஒருவரை தேர்ந்தெடுக்கலாம் என்று கூறியபோது, அப்படிப்பட்ட ஒருவரிற்கு வாக்களிக்கும் எண்ணத்தில் மக்கள் இருப்பார்களா என்றொரு கேள்வி பல்கலைக்கழக மாணவர்களிற்கு எழுந்தது. அதற்கு நாங்கள அப்படி யாரையும் தெரிவு செய்யவில்லை. முதலில் பொதுக் குழுவை கூட்டி பொதுக் குழுவில் இருந்து ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுப்போம் என்று கூறி அவர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்தோம்.

ஆக இவ்வாறான சில சில கேள்விகளுக்கும்சந்தேகங்களுக்கும் நாங்கள் பதில்கள் வழங்கிக் கொண்டிருந்தோம். இதுசம்பந்தமாக அவர்கள் எல்லோருக்கும் ஒரு குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

இது தான் இன்று நடந்தது. அதாவது பூர்வாங்க ஆராய்வுதான். அந்த ஆராய்வின் அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும்என்றதிடமானஒருகருத்து எல்லோரிடமும் காணப்பட்டது. இனி அது எந்தளவிற்கு வலுவுறும் என்பது அடுத்த கூட்டத்தில்தான் தெரிய வரும்.

பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவதன் ஊடாக என்னென்னநன்மைகளைநாங்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை ஆராய்ந்து அறிந்தோம்.

அதாவது பொது வேட்பாளர் வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவார். தமிழ் மக்களின் ஐக்கியத்தை நிலை நிறுத்துவார். சிங்கள மக்களுடன் பேசி தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கக்கூடிய மயக்கங்களைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும். வெளிநாட்டுஅரசுகளுக்கு எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு பல விதமானவற்றை ஒருபொதுவேட்பாளரூடாக நாங்கள் செய்யக் கூடியதாக இருக்கும். அதற்குகந்த ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் இன்று ஒரு கூட்டத்தை நடத்தி உள்ளோம். இதனைத் தொடர்ந்து அடுத்த ஒரு கூட்டத்தையும் வெகுவிரைவிலே நடத்த இருக்கிறோம் – என்றார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பதவிக் காலம் இம்மாதம் 15 ஆம் திகதி நிறைவடையவிருந்தது. இந்நிலையில் அதன் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமை திருத்துவது தொடர்பில் மூன்று உபகுழுக்களின் அறிக்கைகளைப் பெற்று ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

தேர்தல் முறை தொடர்பான அரசியலமைப்புச் சட்ட முன்மொழிவுகளை ஒரு உப குழு பரிசீலித்து பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. ஊடகப் பிரதிநிதித்துவம், பெண்களின் பிரதிநிதித்துவம் போன்ற விடயங்களை மற்றுமொரு உப குழு ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்கவுள்ளது.

மூன்றாவது உப குழு, தேர்தல் அறிவிக்கப்பட்டதன்பின்னர்தேர்தல் நடத்தை விதிகளை தயாரித்தல் மற்றும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பங்கு தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்கும் என்றார்.

தேர்தல் முறையை திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக, முன்னாள் பிரதம நீதியரசர்பிரியசாத்டெப்தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறித்த ஆணைக்குழுவினை நியமித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

## கொரேனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக கொவிட் – 19 பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தாலும் அது அவ்வப்போது சிலருக்குப் பரவுவது கண்டறியப்பட்டு வருகின்றது. கொரோனா திரிபுகள் உலகம் முழுவதும் அவ்வப்போது தீவிரமடைவதும் அடங்குவதுமாக இருக்கின்றது.

இலங்கையில்நீண்டகாலத்தின் பின்னர் இப்போதுதான் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது.

## வளங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையை அறிமுகப்படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சிதான். அன்றை நாளில் இருந்து தற்போது வரையில் அந்தக் கொள்கையால் நாடு கண்டுள்ள முன்னேற்றத்தினை மக்கள் அறிவார்கள்.

அந்தக் கொள்கையால் நாடு தற்போது பொருளாதாரத்தில் எந்தளவுமோசமானநிலைமையை கண்டுள்ளது என்பதையும் மக்கள் உணர்ந்துள்ளார்கள். அவ்விதமான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க, ஐக்கியமக்கள் சக்தி தமது கொள்கையில் இல்லை என்று கூறுவது வேடிக்கையாக உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே கொள்கையில்தான் உள்ளன. அவர்கள் நாட்டின் வளங்களை விற்பனைசெய்துநாட்டைமுன்னேற்றுவது குறித்தே சிந்திக்கின்றார்கள். இத்தகையநபர்கள் எமது கொள்கை சம்பந்தமாக தமது மேடைகளில் பேசுவதுவெட்கக்கேடானதுஎன்றார்.

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைக் கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும்ஜனாதிபதிதேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முன்முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போதைய நிலையில், ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றவர்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்படஎந்தவொருவிடயங்களிலும் கரிசனைகளைக்கொண்டவர்களாக தம்மை வெளிப்படுத்தவில்லை.

ஆகவே, எந்த அடிப்படைகளுமின்றி தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரிப்பது பொருத்தமற்றதொருமுயற்சியாகும். அந்த வகையில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பொதுவேட்பாளரைநிறுத்துகின்றமை பொருத்தமானஅணுகுமுறையாகும்.

அந்த முயற்சிக்கு நான் கொள்கை அளவில் இணக்கம் தெரிவிக்கின்றேன். எனினும், இலங்கைத்தமிழரசுக்கட்சியினுள் இந்த விடயம் சார்ந்து கலந்துரையாடி கட்சியாக தீர்மானம் எடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகின்றது.

ஆகவே, குறித்த விடயம் சம்பந்தமாககட்சியாககூடிஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது – என்றார்.

## நீரில் மூழ்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*திருச்செல்வத்தின் இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

## சீன அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் இந்த வீடமைப்புத் திட்டங்கள்நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் 1996 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்காக சீன அரசாங்கம் 24.48 பில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது. நிர்மாணப் பணிகளை இரண்டரை வருடங்களில் பூர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்காக இந்த வீட்டுத் திட்டங்கள்முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

## கோட்டாபயவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே நாம் கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராகச் செயற்படவில்லை. மறாக அவருக்காகவேசெயற்பட்டுள்ளோம். ஆனால் அவருடைய காலத்தில் முன்னெடுக்கப்பட்ட முறைமைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளோம் என்றார்.

## பெரமுனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுன தனது ஏகோபித்த தீர்மானத்துக்கு அமைவாக வேட்பாளரை அறிமுகம் செய்யும். அதில் எந்தவிதமான சந்கேங்களும்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஆனால், பொது ஜன பெரமுனவின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று எந்த விதமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. ஒருசில உறுப்பினர்கள் தனிப்பட்ட தீமானத்தில் அவ்விதமாக கூறுகின்றனர். அதற்குக் கட்சி

## செம்மணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதியை கோரி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி குழுவுக்கு திட்டமுன்மொழிவை சமர்ப்பித்துள்ளது. இந்நிலையிலேயே குறித்த பகுதியை அமைச்சர் நேரல் சென்று பார்வையிட்டுள்ளார்.

முன்னதாக செம்மணியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட போது குறித்த பகுதியில் விவசாய நிலங்கள் மற்றும் மழை நீர் வழிந்தோடும் வழிகள் இருப்பதால் அப்பகுதியில் மைதானங்களை அமைப்பதில் உள்ள சாதக பாதகங்கள் குறித்து ஆராயப்பட்ட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு நேற்றுச் சென்ற அமைச்சர் நிலைமைகளைஅவதானித்ததுடன் விவசாயம் மற்றும் நீர் வழிந்தோடும் பொறிமுறையை உள்ளடக்கியதான தீர்வுகள் தொடர்பில் ஆராய்ந்து காணொளி வடிவிலான திட்டவரைபை தனக்கு தருமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## குடிவரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களை கையாள்வது போன்றவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும், விமான நிலையத்திற்கு வரும் மற்றும் செல்லும் பயணிகளுக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வழமையான செயற்பாடுகளுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படவில்லை என விமான நிலையத்திற்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# புலம்பெயர்ந்தோரை அவர்களின் இடங்களிலேயே சந்திக்கிறது உண்மை, நல்லிணக்கச் செயலகம்



லண்டன் மற்றும் பாரிஸ் நகரங்களைத் தளமாகக் கொண்டுஇயங்கிவரும்மூவினங்களைச்சேர்ந்தபுலம்பெயர் தமிழர்களை எதிர்வரும் வாரம் சந்திக்கவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் கொள்கைப்பிரிவு தலைவர் யுவி தங்கராஜா, இதுவரை இலங்கையில் இயங்கிய ஆணைக்குழுக்களில் முதன்முறையாகபுலம்பெயர்தமிழர்களையும்உள்வாங்கும் நோக்கிலேயே இச்சந்திப்புக்களை நடத்தவிருப்பதாகத் தெரிவித்தார்.

நாட்டில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்கும் பணிகள் அரசாங்கத்தால் தீவிரமாக முன்னெடுக்கப்படுவரும் நிலையில், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் விதமாக கலாநிதி அசங்க குணவன்ச தலைமையில் இயங்கிவரும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலக அதிகாரிகள் அண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குவிஜயம்மேற்கொண்டு பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

அதேபோன்று தெற்கிலும், குறிப்பாக கொழும்பைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும்சிவில்சமூகஅமைப்புக்களின் பிரதிநிதிகள்மற்றும்புத்திஜீவிகளைசந்தித்து உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தனர்.

அதேபோன்று வடக்கு, கிழக்கிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், போர் விதவைகள், முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாகப் போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் பற்றிய தகவல்களை மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், அரச சார்பற்ற அமைப்புக்களின் செயலகம், மக்கள் பேரவை போன்ற கட்டமைப்புக்களின் ஊடாகத் திரட்டிவருவதாகவும், அவர்களுடனான முறையாக ஒருங்கிணைக்கப்பட்ட சந்திப்புக்கள் இம்மாதம் ஆரம்பமாகும் எனவும் இடைக்கால செயலகத்தின் கொள்கைப்பிரிவு தலைவர் யுவி தங்கராஜா தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது லண்டன் சென்றிருக்கும் யுவி தங்கராஜா, எதிர்வரும் வார தொடக்கத்தில் பாரிஸிலும், 19 மற்றும் 20ஆம் திகதி வார இறுதி நாள்களில் லண்டனிலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை சந்திக்கவுள்ளார். இச்சந்திப்புக்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் என மூவினங்களைச்சேர்ந்த இலங்கையர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

அவர்களுக்கு உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் மற்றும் அதன்கீழ் ஸ்தாபிப்பதற்குத் திட்டமிட்டிருக்கும் ஆணைக்குழு என்பன தொடர்பில் விளக்கமளிக்கவுள்ள யுவி தங்கராஜா, அவர்களது சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கும் பதிலளிக்கவுள்ளார்.

'இதற்கு முன்னர் இலங்கையில் இயங்கிய ஆணைக்குழுக்களைப் பொறுத்தமட்டில், அவற்றில் புலம்பெயர் தமிழர்களோ அல்லது இலங்கையர்களோ பெரும்பாலும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் புலம்பெயர்ந்து சென்ற லட்சக்கணக்கானோர் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர்.

எனவே உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்பதற்கோ அல்லது அச்செயன்முறையில் பங்கேற்பதற்கோ புலம்பெயர் இலங்கையர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். அதன் ஓரங்கமாகவே இச்சந்திப்புக்களை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கின்றோம். - என யுவி தங்கராஜா தெரிவித்தார். (05)

## கே.பீ.எல். கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணம்வென்ற கைகாட்டி நைட் ரைடர்ஸ்





(தில்சாத் பர்வீஸ்)

அஷ்ஹரியன்ஸ் இளைஞர் நண்பர்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'கைகாட்டி பிரிமியர் லீக்' எனும் நாமத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான ஒரு நாள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி வியாழக்கிழமை சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் 6 அணிகள் கைகாட்டியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியிருந்த போதும் இறுதிப்போட்டிக்குகைகாட்டிரோயல்ஸ் மற்றும் கைகாட்டி நைட் ரைடர்ஸ் அணிகள் தெரிவாகி இருந்தன. இதில் கைகாட்டி நைட் ரைடர்ஸ் அணி வெற்றியை தனதாக்கிகொண்டதுடன் கைகாட்டி ரோயல்ஸ் அணி 2 ஆம் இடத்தைப் பெற்றது.

இந்நிகழ்வில் அதீதிகளாக ஐ.கே.கோல்ட் ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சியான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் நளீம் மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்யாலய ஆசிரியரும் சட்டக் கல்லூரி மாணவனுமான ஹாதிக் இப்ராஹிம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அஷ்ஹரியன்ஸ் இளைஞர் நண்பர்கள் அமைப்பின் 4 வருட பூர்த்தியை முன்னிட்டும் நோன்புப் பெருநாளைசிறப்பிக்கும்வகையிலும் கலை,கலாசாரத்தைத் தாண்டி விளையாட்டிலும் அமைப்பின் செயற்பாடுகளும்இடம்பெறவேண்டும் என்ற அடிப்படையிலே இந்த போட்டி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வுக்கு ஐ.கே.கோல்ட் ஹவுஸ் ,ஆர்.எஸ்.ஆர்.ஹார்ட்வெயர் போன்றநிறுவனங்கள் அனுசரணை வழங்கி இருந்ததோடு ஊடக அனுசரணையை ஹய் டீ.வி தமிழ் வழங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(05)

## பலஸ்தீனியர்களுக்காக ஜனாஸா தொழுவதுடன் யூத பொருள்களை புறக்கணிக்க தீர்மாணிப்போம்

### கலிலூர் ரஹ்மான் கோரிக்கை.



(நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான்)

இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்த பலஸ்தீனியர்களுக்காக வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்குப் பின் ஜனாஸா தொழுவதற்கு உலமாக்கள், சமூக தலைவர்கள் முன்வருமாறு கேட்டுக்கொள்வதுடன், பலஸ்தீன மக்களை பலப்படுத்த முற்போக்கு சிந்தனை கொண்ட இலங்கை மக்கள் அனைத்து இஸ்ரேலிய பொருள்களையும் புறக்கணித்து, அவர்களின் உற்பத்திகளை நிராகரித்து பலஸ்தீன மக்களை தினமும் கொல்லும் இஸ்ரேலை பொருளாதார ரீதியாகவீழ்த்தமுன்வருமாறுகேட்டுக்கொள்கிறேன் என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிடும் போது -

பலஸ்தீன காஸா பகுதியில் ஜனநாயக முறைப்படி நடந்த தேர்தலில் காஸா மக்களின்வாக்குகளால் ஜனநாயகம் வெற்றி பெற்றதால் இப்போது இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனத்தைச் சேர்ந்த காஸா மக்கள் மீது உச்சக்கட்ட அத்து மீறலைமேற்கொண்டு ஈவிறக்கமின்றிதாக்குதல் நடத்தி அப்பாவி மக்களைக் கொல்கின்றனர்.

காஸாவில் உள்ள பலஸ்தீன மக்களைப் படுகொலைசெய்வதை நிறுத்தாத இஸ்ரேல், தற்போது காஸா மக்களை ஜனநாயக ரீதியில் வழிநடத்தி வரும் பலஸ்தீன ஜனநாயக ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் குடும்ப உறுப்பினர்களை குறிவைத்து பாரிய படுகொலை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

அந்தக்கொலைகளால்,புனிதரமலான்பெருநாள் பண்டிகையின் போது இஸ்மாயில் ஹனியாவின் மகன், மூன்று மகள்கள், பேரக்குழந்தைகள் மற்றும் ஏழு கொள்ளுப் பேரக்குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். அதற்காக அவருக்கும் அவரதுகுடும்பத்தாருக்கும்எமதுஅனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இஸ்மாயில் ஹனியா உள்ளிட்ட பலஸ்தீன மக்கள் தமது குடும்ப உறுப்பினர்களையோ அல்லது பலஸ்தீன மக்களையோ இஸ்ரேல் கொன்றுவிட்டு ஜனநாயக பலஸ்தீன நிலத்தைக் கையகப்படுத்த முடியாது என்பதை தமது மனவலிமையால் உணர்த்தியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிறைச் சாவுகளைத் தடுக்க நடவடிக்கைகள் அவசியம்

**இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை மிக அதிகம் என்கிற அதிர்ச்சியூட்டும் தகவல் அண்மையில் வெளியாகியது.**

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின்படி, 2020 முதல் இந்த ஆண்டு (2024) வரையான காலகட்டத்தில், மொத்தம் 631 கைதிகள் சிறைகளில் இறந்துள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் ஆண்கள், 18 பேர் பெண்கள். 61 பேர் சிறைகளில் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

**தீவிரமான கண்காணிப்பும் பாதுகாப்பும் உள்ள சிறைகளிலேயே இந்தத் தற்கொலைகள் அனைத்தும் நிகழ்ந்துள்ளன என்பது மிகவும் கவனத்திற்குரியது. தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை இலங்கையில் வியப்புக்குரிய வகையில் மிக அதிகம் என்கின்றன புள்ளிவிவரங்கள். அந்த நிலை சிறைகளுக்குள்ளும் நீடிப்பது பரிதாபத்துக்குரியது.**

**இலங்கையை சொர்க்கபுரியாகவும் சிறந்த சுற்றுலா மையமாகவும் மகிழ்ச்சிக்குரிய இடமாகவும் கணித்து பல லட்சக்கணக்கான சுற்றுலாவிகள் வருகின்றபோது இலங்கையர்களுக்கு அது ஏன் நகரமாக இருக்கின்றது என்பது பெரும் ஆய்வுக்குரிய கேள்வி. அதற்குப் பதில் கண்டறியப்பட்டு தீர்வுகள் காணப்படுவதும் அவசியம். அதற்குரிய நடவடிக்கைகள் மீது ஆளும் தரப்புத் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.**

**இலங்கைச் சிறைகளில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்படும் விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கை அதிகம். முகத்தோற்றமளவில் குற்றவாளி என்று தோன்றினால்அவர்களைக்கைதுசெய்துவிளக்கமறியலில் வைப்பதற்கு இலங்கைச் சட்டங்கள் இடமளிக்கின்றன. இதனால் பல சமயங்களில் குற்றங்களோடு தொடர்புபடாத பலருமேகூட சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்படுகின்றார்கள். இது அவர்களுக்கு மனச் சிதைவை ஏற்படுத்துகின்றது. தவறான முடிவுகளை எடுப்பதற்குத் தூண்டுகின்றது.**

**தண்டனைக் கைதிகளும் விளக்கமறியல் கைதிகளும் தனித்தனியேதடுத்துவைக்கப்பட்டுள்ளபோதும்சிறைகளில் அவற்றின் கொள்ளளவையும் மீறி கைதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இது ஏற்படுத்தும் மன அழுத்தம்கூட அவர்களின் தற்கொலை அதிகரிப்புக்கான காரணமாக இருக்கக்கூடும்.**

**சிறைகளில் கைதிகளின் மனநிலையை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சிறை நிர்வாகம் தெரிவிக்கின்றது. சிறைகளில் உள்ளவர்களின் தனிநபர் மனநலம் தொடர்ந்து கவனிக்கப்படுவதாகவும் கைதிகள் மனநலத்தை பேணுவதற்கு உதவும் ஆன்மீக மற்றும் அழகியல் நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கப்படுவதாகவும்கூட சிறை நிர்வாகம் தெரிவிக்கின்றது.**

**சில தவிர்க்க முடியாத தனிப்பட்ட மற்றும் உளவியல் பிரச்சினைகள் தற்கொலைகளை ஏற்படுத்தக்கூடும் என்றார். சில நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டவுடன் மிகக் குறுகிய காலத்திற்குள் தற்கொலை செய்துகொள்வதாகவும் அதனால், இவ்வாறான சம்பவங்களைக் கையாள்வது மிகவும் கடினமாக இருப்பதாகவும் கூறுகின்றார் சிறைச்சாலைகள் பணிப்பாளர் மற்றும் பேச்சாளர் காமினி பி. திஸநாயக்க. இது உண்மையெனில் இது தொடர்பில் உளநலத்துறை நிபுணர்களுடன் ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகளை ஆளும் தரப்பு எடுக்கவேண்டும். .**

**அத்தோடுசிறைகளில்தற்கொலைகளைத்தடுப்பதற்கான புதிய அணுகுமுறைகளைத் தேடுவதோடு, கைதிகளுக்கு ஆன்மீக மற்றும் ஆற்றுப்படுத்தல் செயற்றிட்டங்களின் வேகத்தையும் தீவிரத்தையும் அதிகப்படுத்தவேண்டியதும் அவசியம்.**

# எதிர்வினையாற்றும் ஆளுமை

**கலாநிதி ம.திருமலை**

மனிதர்களின்ஆளுமையைஉளவியலறிஞர்கள் பல வகைகளாகப் பகுத்துக் காட்டியுள்ளனர். ஜான்சன் டர்பி என்னும் உளவியலறிஞர், வெளிப்படைத்தன்மைமிக்கோர், மனச்சான்றினை மதிப்போர், நட்புறவு கொள்வோர், ஒத்திசைவு கொள்வோர், நரம்பியல் பாதிப்புள்ளோர் என்றவாறு பலவகையான ஆளுமைப்பண்புடைய மனிதர்களை இனங்காட்டுகின்றார்.

இங்குக் குறிப்பிடப்படாத வேறு சில வகை ஆளுமையாளர்களும் உள். அத்தகையவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவகையினர் எதிர்வினையாற்றும் ஆளுமையாளர் ஆவர். எதிர்வினை என்றவுடன் எதிர்மறைச் செயல் (நெகட்டிவ் ஆக்‌ஷன்) என்ற பொருளை நினைவுகூர்ந்து, இணைத்து இடர்ப்படத் தேவையில்லை.

எதிர்வினை (ரீஆக்டிவ்) என்பது, ஒரு நிகழ்ச்சியைக் கண்ணெதிரே கண்டவுடன் 'நமக்கேன் வம்பு' என்று ஒதுங்கிப் போகாமல், அதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மேலதிகமாகச் செயல்படும் மனிதர்களைப் பற்றியதாகும்.

உளவியலறிஞர்கள் எதிர்வினையாற்றும் ஆளுமையினரின் பண்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காட்டுகின்றனர்: மிக விரைவாகவும் மரபுகளைத் தேவையான அளவு வளைத்தும், செயல்படக் கூடியவர்கள். இவர்கள் ஒரு பணியைச் செய்வதில் பின்பற்றப்பட விதிமுறைகளை மட்டுமே பற்றிக் கொண்டிராமல் விட்டுக் கொடுத்தும் போவார்கள். இவர்களுக்கு ஒரு செயலின் இறுதி விளைவே முக்கியம். ஒரு சிக்கலை அதன் வேருடன் களைபவர்களாக இவர்கள் இருப்பார்கள்; சிக்கலின் அறிகுறிகளை மட்டும் களைபவரல்லர்.

துன்பங்கள் ஏற்படும்போது விரைந்து செயல்பட்டு உதவுவர். கடினமான அழுத்தங்களுக்கு இடையிலும் இவர்கள் திறம்படப் பணிபுரிவார்கள். குறிப்பிட்ட செயலின் மீதான தங்களது அறிவுபூர்வமான மதிப்பீட்டினையும் செயற்படுத்துவார்கள். வெறுமனே சிக்கல் - தீர்வு மட்டுமே இவர்களது இலக்கல்ல. ஒரு நிகழ்ச்சியில், தாங்கள் முதன்மை இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று போராடுவார்கள்.

இத்தகைய எதிர்வினையாற்றும் ஆளுமைப் பண்பினர் தங்கள் திறமை மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டும் என்று விரும்புவர்களாக இருப்பார்கள்; மனிதவள மேலாண்மைத்துறையில் இப்பண்பு மிக இன்றியமையாததாகும்.

எதிர்வினையாற்றும் ஆளுமையுடையவர்கள் பற்றி இற்றை நாள்களில் கூறப்பட்டுள்ள உளவியல் ஆய்வு முடிவுகள் பல தமிழின் செவ்வியல் இலக்கியங்களுடன் பொருந்துகின்றன என்பது வியப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

சங்கஇலக்கியங்களுள்ஒன்றானபுறநானூற்றில் குறிப்பிடப்படும்பலமன்னர்கள்எதிர்வினையாற்றும் ஆளுமைப் பண்புடையவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். மதுரைக் குமரனார் என்ற புலவர் சிற்றூர் ஒன்றின் தலைவனான தோயன் மாறன் என்பவனைக் குறித்துப் பாடியுள்ள பாடல் எதிர்வினையாற்றும் ஆளுமைத் திறனுக்குச் சான்றாக அமைகிறது.

வறுமையில் வாடிய இரவலர் ஒருவரை நோக்கி, 'நாள்தோறும் கொடுக்குமளவுக்குச் செல்வமில்லாதவன். ஆயினும் துன்பப்படுபவர்களுக்கு இல்லை என்று பதில் கூறுகின்ற சிறுமையுமில்லாதவன். இவன் பல்வேறு போர்களில் ஈடுபட்டு உடலில் விழுப்புண்களைத் தாங்கியவன். பாணர்களை வருத்தும் பசிக்கு அவன் பகைவன். நீ என்னுடன் வந்தால் நமது ஒட்டிய வயிற்றைக் கொல்லனிடம்காட்டி, உடனே நல்லவலிமையுடைய வேலினை வடித்துக் கொடு என்று அவனிடம் கேட்பான்' என்று மதுரைக் குமரனார் கூறுகிறார்.

இக் கருத்தமைந்த பாடல் அடிகள் (புறநானூறு: 180) பின்வருமாறு:

**யாம் தன் இரக்கும் காலை, தான் எம்**
**உண்ணா மருங்குல் காட்டி, தன் ஊர்க்**
**கருங் கைக் கொல்லனை இரக்கும்,**
**திருந்து இலை நெடு வேல் வடித்திசின்**

இப்பாடலில், பாணர் வறுமை தீர்க்கக் கொல்லனிடம் வேல் வடித்துக் கொடுக்குமாறு வேண்டும் செயல் உலக இலக்கியங்களில் எங்கும் காணவியலாத ஒன்றாகும்.


எதிர்வினையாற்றும் ஆளுமை மிக்க மனிதர்களின் பண்பான விரைந்து செயல்படுதல் (ஸ்விஃப்ட் ஆக்‌ஷன்), சிக்கலை வேருடன் களைதல், கடினமான சூழல்களுக்கு நடுவிலும் செயல்படுதல் போன்ற பண்புகள் தோயன் மாறனிடம் இருப்பதைப் புலவர் காட்டுகிறார்.

தன்னிடம் போதிய செல்வம் இல்லாத நிலையில் பிறருடன் போரிட்டுப் பொருள் சம்பாதித்து வந்து உதவ நினைப்பது கடினமான சூழலிலும் செயல்படும் பண்பைப் குறிக்கிறது. இது சிக்கலின் ஆணிவேரினைக் களைதல் எனும் பண்பாகும்.

பாணனின் தோற்றத்தினைக் கண்டவுடனே கொல்லனிடம் வேல் வடித்துத் தருமாறு கேட்டல் விரைவுப் பண்பைக் குறிக்கிறது. தோயன் மாறன் எதிர்வினையாற்றும் ஆளுமை உடையவன் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது. உளவியலும் இலக்கியமும் சந்திக்கும் மையப்புள்ளி இது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம் .

தலையாலங்கானத்துச்செருவென்றபாண்டியன் நெடுஞ்செழியன்மிகவும்இளம்வயதிலேயேஅரசப் பதவியை அடைந்தவன். அவன் மீது அழுக்காறு கொண்ட மன்னர் பலரும் ஒன்றாக இணைந்து போர் தொடுக்க , இதனை ஒற்றர் மூலம் அறிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் சினம் கொண்டு பகைவரின் திட்டத்திற்கு எதிர்வினையாற்றுகிறான்.

அவன், 'என்னை இகழ்ந்து பேசிய பகைவர்களை வென்று அவர்களின் வெற்றி முரசத்தைக் கைப்பற்றுவேன்' என்று சூளுரை பகர்கிறான். பகையரசர் இன்னவாறு கூறினர் என்று, கேட்டவுடன் செயலில் இறங்கும் விரைவு,




தீவிரத்தன்மை முதலிய தலைமைப் பண்புகள் உடையவனாகத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பண்பு புலப்படுத்தப்படுகிறது.

அப்பாடல்,

**நகுதக் கனரே நாடு மீக் கூறுநர்**
**இளையனிவ னெனஉளையக் கூறிப்**
**படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்**
**நெடுநல் யானையும் தேரும் மாவும்**
**படையமை மறவரும் உடையம்**
**யாம் என்று**
**உறுதுப்பு அஞ்சாது உடல்சினம்**
**செருக்கிச்**
**சிறுசொல் சொல்லிய சினங்கெழு**
**வேந்தரை**
**அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு**
**ஒருங்கு அகப்படேனாயின் பொருந்திய**
**என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது**
**கொடியன் எம்இறை எனக் கண்ணீர்**
**பரப்பி**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ்**
**சிறப்பின்**
**புலவர் பாடாது வரைக என் நிலவரை...**
(புறநானூறு: 72)

விரைவும் தீவிரத் தன்மையும் உடைய ஆளுமைப் பண்பு இப்பாடலில் புலனாவதை உணரலாம்.

நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் தன்னை முதல் மனிதனாக நிலைநிறுத்திக் கொள்ள எதிர்வினையாற்றும் ஆளுமையாளன் முயற்சி செய்வான் என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. அதியமான் இவ்வாறு மற்றவர்களை முந்திச்சென்று கருணை காட்டுபவன் என்பதை ஔவையார் ஓர் இரங்கற்பாவில் கூறுகிறார்.

புறநானூற்றில்,

**சிறியகட் பெறினே, எமக்கீயும் மன்னே!**
**பெரிய கட் பெறினே!**
**யாம் பாடத், தான் மகிழ்ந்து உண்ணும்**


தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# எதிர்வினையாற்றும் ஆளுமை

4ம் பக்க தொடர்ச்சி...........

**மன்னே!**
**சிறு சோற்றானும் நனிபல கலத்தன்**
**மன்னே!**
**பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன்**
**மன்னே! என்பொடு தடிபடு வழி எல்லாம் எமக்கு**
**ஈயும் மன்னே!**
**அம்பொடு வேல் நுழை வழி எல்லாம்**
**தான்நிற்கும் மன்னே!**

(புறநானூறு: 235)



என்றுஔவையார்அதியமானைக் குறித்துப் பாடிய இரங்கற்பாவில் எல்லா நிலைகளிலும் தன் முயற்சிகளைக் குறைவின்றிச்செய்துபெயர்பெற்றஅதியமானின் பண்பு கூறப்பட்டது.

சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்தில் சித்திரிக் கப்படும் சேரன் செங்குட்டுவன் மேற்கூறப்பட்ட எதிர்வினையாற்றும் பண்புடையவன், எதிர்வினையாற்றும் ஆளுமை மிக்கவர்களிடம் காணப்படும் 'அங்கீகார எதிர்பார்ப்பு' (ரெகக் னேஷன்)செங்குட்டுவனிடம் காணப்படுகிறது.

வடதிசைப் படையெடுப்பில் வெற்றி பெற்றுக் கண்ணகியை வழிபடக் கல் கொண்டு திரும்பிய பின்னர் கனக விசயரை ஏனைய தமிழ் மன்னர்களான சோழனுக்கும் பாண்டியனுக்கும்காட்டிவெற்றியை அறிவித்து வருமாறு கூறி படைத் தலைவர்களை அனுப்புகிறான் செங்குட்டுவன்.

கனக விசயர்களைக் கைதிகளாகக் கண்ட சோழனும் பாண்டியனும் பாராட்டுவார்களென்றும்தமிழரின்வீரம்குறித்துப் பெருமிதம் கொள்வரென்றும் செங்குட்டுவன்கருதினான்;அதற்கு மாறாக, சோழனும்பாண்டியனும் கேலி செய்து பேசினர். இதனைக் கேட்டவுடன் செங்குட்டுவன், கோபமடைகிறான்.

இது அவனது எதிர்வினை யாற்றும் ஆளுமையை எடுத்துக் காட்டுகிறது. மாடல மறையோன் செங்குட்டுவனின் வீரத்தையும் வெற்றிகளையும் பலவாறு பாராட்டியபின்னரேசெங்குட்டுவன் அமைதியடைகிறான் .

இலக்கியங்களை அவற்றுக் குள் மட்டுமே நின்று புரிந்து கொள்வதைவிட உளவியல் , சமூகவியல்,மானுடவியல்போன்ற துறைகளின் கோட்பாடுகளைக் கொண்டு ஆய்வது பயன்மிகு செயலாகும். இம்முறையில் சிலப்பதிகாரத்தை நோக்கும் போது மூலப் பனுவலின் சிறப்பு பன்மடங்கு மிகுகிறது.

# விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க தௌபீக் எம்.பி. நடவடிக்கை





(எஸ். சினீஸ் கான்)

தோப்பூர் செல்வநகர் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீரப்பதற்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் மற்றும் விவசாய சம்மேளன உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் வியாழக்கிழமை செல்வநகர்பிரதேசத்தில்இடம்பெற்றது.

இதன்போது குறித்த பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் எட்டப்பட்டன.

இச்சந்திப்பின்போது திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் பொறியியலாளர் சுப்ரமணியம், விவசாய சம்மேளனத்தலைவர் தாஜ்மீன்,முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்றிபாஸ், மத்தியகுழுச் செயலாளர்றசீத்மற்றும் விவசாயிகள்கலந்து கொண்டனர். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நல்லம்மா வெற்றிக் கிண்ணம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி





உருத்திரபுரம் விளையாட்டுக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் கிளிநொச்சிஸ்ரார்ஈகிள்ஸ்விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணிகளும் எந்தவொரு கோல்களையும் பெறாது பலமான போட்டியை வழங்கியிருந்தனர்.



தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இரண்டு அணிகளும் பலமான போட்டியை வழங்க ஆட்டத்தின் இறுதி நேரத்தை அண்மிக்க வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி கோல்ஒன்றைபெற்றுக்கொள்ள 1:0 என்ற கோல் கணக்கில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. (05 - 113)

# வவுனியாவில் இருந்து 15 லட்சம் ரூபா பலஸ்தீன உறவுகளுக்காக அன்பளிப்பு

## ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைப்பு

வவுனியா தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டில் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக பலஸ்தீன உறவுகளுக்கான நிதியத்திற்கு ஒன்றரை மில்லியன் ரூபா பணம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் கடந்த திங்கட்கிழமை வரை வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைத்துதரப்பினரும்சகோதரத்துவஉணர்வோடு 150,0552 ரூபா பணத்தை வழங்கியிருந்தனர்.

குறித்த பணம் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள பலஸ்தீன உறவுகளுக்கான நிதியத்திற்கு வழங்குவதற்காக நிதியத்தின் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு குறித்த அமைப்பினரால் புதன்கிழமை வைப்பு செய்யப்பட்டது.

(05 - 100)

# கடுமையான வெப்பத்தை சமாளிக்க பறவைகளுக்கு மரங்களில் தண்ணீர்

## வவுனியா இளைஞர்கள் முன்மாதிரி செயற்பாடு







அதிக வெப்பமான காலநிலை நிலவுவதால் விலங்குகளின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வவுனியா - மன்னார் வீதியின் சில பகுதிகளில் மண் சட்டி மற்றும் சிரட்டைகளைப் பயன்படுத்தி இளைஞர்களால் தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக பறவைகள் பல நீரின்றி அவதிப்படுகின்றன. இந்நிலையில் இளைஞர்கள் சிலர் தாமாக முன் மாதிரியாக வவுனியா - மன்னார் வீதியில் காணப்பட்ட மரங்களில் மண்சட்டி மற்றும் சிரட்டை என்பவற்றை மரக் கிளைகளில் கட்டி அதற்குள் நீர் விட்டு தொட்டி அமைக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர்.

இளைஞர்களின் மனிதநேயமிக்க குறித்த செயற்பாடு பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05 - 100)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# ஏப். 20 தமிழ் அரசுக் கட்சி மத்தியகுழு கூடி தமிழ் பொது வேட்பாளர் குறித்து தீர்மானம்

## சிறிதரன் எம்.பி. அறிவிப்பு

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் நிறுத்துவது தொடர்பில் தமிழரசுக் கட்சியிலுள்ளவர்களிடம் ஆதரவானவர்களும் உள்ளனர். எதிரானவர்களும் உள்ளனர். 20 ஆம் திகதிக்கு இடையில் தமிழரசுக்கட்சியின் மத்திய குழு கூடவுள்ளது. கூடியே இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

(05 - 113)

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயம்

வவுனியா ஏ9 வீதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நகரிலிருந்து பயணித்த உழவு இயந்திரம் சாந்தசோலை வீதிக்குதிருப்ப முற்பட்ட வேலை ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# வவுனியா தாலிக்குளம் பகுதி விவசாயிகளிடம் இருந்து உழுந்தை பெற்றுவிட்டு ஏமாற்றிய தனியார் நிறுவனம்

## நடவடிக்கை எடுப்பதில் பொலிஸார் அசமந்தம்

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் உள்ள 8 விவசாயிகளிடம் உழுந்தைக் கொள்வனவு செய்துவிட்டு 20 லட்சம் ரூபா பணத்தைக் கொடுக்காது கிறீன் விசன் லங்கா பிறைவேட் லிமிடெட் ஏமாற்றியுள்ளதாக விவசாயிகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வடக்கு பகுதியை மையமாகக் கொண்டு இயங்கும் கிறீன் விசன் லங்கா பிறைவேட் லிமிடெட் என்னும் தனியார் நிறுவனம் ஊடாக வவுனியா தாலிக்குளம் விவசாயிகளுக்கு செய்கை பண்ணுவதற்காக உழுந்து வழங்கப்பட்டுள்ளது.

அறுவடை முடிந்த பின் தாம் வழங்கிய உழுந்தையும், அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு விவசாயிகளும் வழங்க வேண்டிய உழுந்தையும் குறித்த நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது.

அதன்பின், விவசாயிகளிடம் இருந்த மேலதிக உழுந்தை நியாய விலையில் பெறுவதாகக் கூறி கிலோ 1000 ரூபாய் படி 8 விவசாயிகளிடம் 20 ஆயிரம் கிலோ உழுந்து 20 லட்சம் ரூபா பெறுமதிக்கு குறித்த நிறுவனம் பெற்றுக் கொண்டதுடன், அதற்கு பற்றுச்சிட்டை வழங்கி குறிப்பிட்ட ஒரு மாத காலத்திற்குள் பணம் தருவதாக எழுத்து மூலம் வழங்கியுள்ளனர்.

குறிப்பிட்ட திகதிக்குள் பணம் வழங்காமையால் ஏமாற்றமடைந்த விவசாயிகள் குறித்த நிறுவனத்திடம் சென்று பணத்தை கேட்ட போது சாட்டுப் போக்குகள் கூறி விவசாயிகளை அலைக் கழித்ததுடன், வவுனியா, முதலாம் குறுக்கு தெருவில் உள்ள அலுவலகத்தையும் மூடி வைத்துள்ளனர்.

நிறுவன வவுனியா பணிப்பாளரும் உரிய வகையில் பதில் அளிக்காமையால் பாதிக்கப்பட்டவர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் தமக்கு இன்னும் பணம் கிடைக்கவில்லை எனவும், பொலிஸார் குறித்த நிறுவன பணிப்பாளர் கூறும் சாட்டுப் போக்குகளை தமக்கு கூறி தம்மை அலைக்கழிப்பதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

8 விவசாயிகளிடம் இருந்து 20 ஆயிரம் கிலோ உழுந்து பெறப்பட்டுள்ளதுடன், 20 லட்சம் ரூபா பணம் இதன் மூலம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதனால் தாமும் தமது குடும்பமும் பல்வேறு நெருக்கடிக்குள் முகம் கொடுத்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விசாயிகள் தெரிவிக்கின்றனர். (05 - 100)

# முஅத்தின் மற்றும் கதீப்மார்களுக்கு நாபீர் பவுண்டேஷனால் கௌரவிப்பு










(எஸ்.அஷ்ரப்கான்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த பள்ளிவாசல்களில் கடமையாற்றும் நாபீர் பவுண்டேஷன் மூலம் பள்ளிவாசல்களில் கடமையாற்றும் முஅத்தின் மற்றும் கதீப்மார்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்முனை நூராணியா பள்ளிவாசலில் நாபீர் பௌண்டேஷனின் ஸ்தாபகர் பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீர் தலைமையில் செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

இங்கு நாபீர் பௌண்டேஷனின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பாயிஸ் கரீம் உட்பட அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(05)

# நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம் என்ற தொனிபொருளில் பொலிஸ் எச்சரிக்கை





கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுஇடங்களில் குப்பைகள் கொட்டுவார்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலியுறுத்தி பொலிஸார் பதாதைகளை காட்சிப்படுத்தி வருகின்னர்.

மாவட்டத்தில் அதிகளவு மக்கள் நடமாடி வருகின்ற பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதால் அக்கழிவுகளால் போக்குவரத்து பயணிகளுக்கும் அசோகரிங்கள் விளைவிக்கின்ற போதும் பல தொற்று நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாலும் இவ்வாறான வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்க விடயம்.

(05 - 113)

# புத்தாண்டை முன்னிட்டு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

## 7500 பொலிஸார் கடமையில்

புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் 7500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

உலகளவில் தீவிரவாத மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்கள் அடிக்கடி எதிர்பாராத விதமாக நிகழ்கின்றமையால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொவிட் தொற்று, அதன்பின்னர் 2022 மற்றும் 2023இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றால் சுமார் 4 ஆண்டுகள் சித்திரைப் புத்தாண்டை மக்கள் பெரிதளவில் கொண்டாடவில்லை. எனினும் இவ்வாண்டு நிலைமை சற்று சீராகியுள்ளமையால் மக்கள் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு ஆர்வத்துடன் தயாராகி வருகின்றனர்.

தலைநகர் கொழும்பு உட்பட ஏனைய பிரதான நகரங்களில் பெருந்திரளான மக்கள் புத்தாண்டுக்குத் தேவையான பொருள்கள், ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்காகக் குவிந்துள்ளனர். அத்தோடு தலைநகரிலிருந்து தமது சொந்த இடங்களுக்கு பெருமளவான மக்கள் செல்கின்றமையால் இலங்கை போக்குவரத்து சபை விசேட போக்குவரத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

வியாழக்கிழமை முதல் இவ்விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர்வரும் 15 ஆம் திகதி அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே கொழும்பிலிருந்து தமது சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் வருவதற்காக, 15ஆம் திகதியிலிருந்து விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர் சாயி விதுசாவிற்கு தமிழ் பெண் ஆளுமை விருது



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சுயாதீன ஊடகவியலாளர் திருமதி சாய் விதுஷா அஜித் தமிழ் பெண் ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'விழித்தெழு பெண்ணே' என்னும் மகுடத்தின் கீழ் கனடா சர்வதேச பெண்கள் அமைப்பு இந்நிகழ்வை நடத்தியது.

கண்டி கோல்டன் கிரவுண்ட் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை தமிழ் பெண் ஆளுமைகளின் விருது விழா சிறப்பாக இடம் பெற்றது .

அந்த நிகழ்வில் கொழும்பில் வாழும் மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி சாயிஅஜித் பெண்ணாளுமை விருது பெற்றுக் கொண்டார்.

இவர் மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் எழுத்தாளர் செழியன் பேரின்பநாயகத்தின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது. (05)



# வெற்றிலை பறிக்க மரத்தில் ஏறியவர் கிணற்றில் வீழ்ந்து பரிதாபச் சாவு

பலாங்கொடை பிரதேசத்தில் வெற்றிலை பறிப்பதற்காக மரத்தில் ஏறிய நபரொருவர் அருகிலிருந்த கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

52 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வெற்றிலைபறிப்பதற்காகதோட்டத்தில் உள்ள 40 அடி உயரமுடைய மரமொன்றில் ஏறி வெற்றிலை பறிக்க முயன்றுள்ளார்.

இதன்போது, இந்த மரத்தின் கிளை ஒன்று முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் மரத்தில் ஏறியிருந்தவர் அருகிலிருந்த கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# விசேட அதிரடிப்படையினர் தாக்குதல் மன்னாரில் சம்பவம்; இளைஞன் கைது

குற்றச் செயல் ஒன்றுக்குத் தயாராகிக் கொண்டிருந்த நபர்களை கைதுசெய்ய முயன்ற விசேட அதிரடிப்படை வீரர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்த முயன்ற17வயதுஇளைஞனொருவர் மன்னாரில்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்தசம்பவம், மன்னார் பெரிய கரிசல் பிரதேசத்தில் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குற்றச் செயல் ஒன்றைப் புரிவதற்காகதயார்நிலையில்இருந்த நபர் ஒருவரை கைது செய்வதற்காக விசேடஅதிரடிப்படையினர் மன்னார் பெரிய கரிசல் பிரதேசத்தில் திடீர் சுற்றிவளைப்பு நடத்தியுள்ளனர்.

இதன் போது குறித்த சந்தேக நபரிடமிருந்து கூரிய வாள் மூன்று கூறிய கத்திகள் மற்றும் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அதனையடுத்து 40 வயதான சந்தேக நபரும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான 17 வயது இளைஞன் ஒருவர் கூரிய கத்தியால்விசேடஅதிரடிப்படையினர் மீது கொலைவெறித் தாக்குதலை நடத்த முயன்றதையடுத்து அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது காயத்திற்குள்ளான விசேட அதிர அதிரடிப்படை வீரர் ஒருவர்காயமடைந்துமன்னார்பொது வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகமன்னார்பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட17வயதுடைய இளைஞன் பாடசாலை செல்லும் மாணவன் எனவும் தெரிய வந்துள்ளது. (05)

# நெற்செய்கையில் புதிய தொழில்நுட்பங்கள் மாவடி முன்மாரி திக்கோடையில் அறிமுகம்



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் திக்கோடை விவசாய போதனாசிரியர் பிரிவின் புதுவட்டை கண்டத்தில்விவசாயபோதனாசிரியர்எஸ். சசிகுமார் தலைமையில்நாற்றுநடும்இயந்திரத்தின்மூலமும், பரசூட் முறையிலும், சாதாரண வீசிவிதைத்தலிலும் ஒப்பீட்டு ரீதியிலான முன்மாதித்துண்ட செய்கை நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன், பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி லாவண்யா செந்தீபன், லக்ஸ்மன், மாறன் ஆகியோருடன் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதே நிகழ்வு மாவடிமுன்மாரி கிராமத்திலும் தொழில்நுட்ப உதவியாளர் துஷாந்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

பரசூட் முறையிலான நெற்செய்கை, நாற்று நடும் இயந்திரத்தின் மூலமான நாற்றுநடுகையின் நன்மைகள்பற்றியதெளிவானவிளக்கங்களுடன்இம்



முறைகளில்பயன்படுத்தப்படும்தொழில்நுட்பங்கள் என்பன முறையான செய்து காட்டல்கள் மூலம் விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

ஏற்கனவே பரசூட் தட்டுக்களில் இடப்பட்ட நாற்றுகள் நடுகை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

பரசூட்முறையிலானநெற்செய்கையின்போதும் நாற்று நடும் இயந்திர நடுகையின் போதும் அதிக விளைச்சல் மூலமாக உயர் இலாபத்தை பெற்றுக் கொள்ள முடியும். (05)

# கணவன் இறந்த சம்பவம் தொடர்பில்: மனைவியும் அவரது நண்பரும் கைது

கணவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் மனைவியும் அவரது நண்பரும் பொலிஸாரால் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில் ஒருவர் உயிரிழந்தார் எனக் கடந்த 10ஆம்திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தசம்பவத்தில்அக்கரைப்பற்று கோளாவில் பகுதியை சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தநபரின்சடலம்மீதான பிரேதபரிசோதனைவியாழக்கிழமை அக்கரைப்பற்றுவைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்து.

பிரேத பரிசோதனையில் கழுத்தை அறுத்ததால் ஏற்பட்ட அதிக இரத்தப்போக்கு காரணமாக குறித்த மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதையடுத்து கொலையாக இருக்கலாம் என சந்தேகித்த பொலிஸார், மரணம் தொடர்பில் உயிரிழந்தவரின் 33 வயதுடைய மனைவி மற்றும் அவரது 63 வயதுடைய கள்ளக்காதலன் ஆகியோர் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

# பரந்தன் முல்லை வீதி விபத்தில் ஒருவர் காயம்



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் முல்லை வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 8.20 மணியளவில் பரந்தன் அன்மித்த பகுதியில் முல்லைதீவு பகுதியிலிருந்து பரந்தன் நோக்கிவந்த டிப்பர் வாகனம் எதிரே சைக்கிளில் பயணித்த நபரில் மோதுண்டு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (05 - 113)

# மூதூர் கணேசபுரம் கிராமத்தில் நீர்த் தடாகம் திறந்துவைப்பு

(எச் எம் ஹலால்தீன்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கட்டைபறிச்சான் கணேசபுரம் கிராமத்தில் நீர் தடாகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கணேசபுரம் கிராமத்தில் உள்ள சக்தி விவசாய பண்ணைக்கு முன்பாக




இந்த நீர் தடாக தொட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

வறட்சியான காலங்களில் இந்த கிராமங்களில் நீர் ஏரிகள் குளங்களில் நீர் பற்றாகுறை ஏற்படும் போது இங்கு



வாழும் உயிரினங்கள் நீர் இன்றி வருந்துகின்றன.

இதனைக்கருத்தில்கொண்டு இந்தக் கிராமங்களில் வாழும் உயிரினங்களுக்கு நிறைவான






நீர் கிடைக்க வேண்டும் என்று இந்த சமூக சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இச்செற்பாட்டின் மூலம் ஆடு, மாடு முதலான கால்நடைகளும், பறவை இனங்களும் இந்த நீர் தடாகத்தை பயன்படுத்தி நீரை அருந்துகின்றன. (05)

# இரண்டு பிள்ளைகளின் தந்தை கிளிநொச்சியில் சடலமாக மீட்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபரந்தன் பகுதியிலுள்ள நீர்ப்பாசன வாய்க் காலிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் வெள்ளிக்கிழமை மீட்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியை சேர்ந்த 37 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கட்சியோடு இணைந்து செயற்பட அமைச்சுப் பதவி தரவேண்டும்

## உதுமான்கண்டு நாபீர் பகிரங்கம்




(எஸ்.அஷ்ரப்கான், எம்.எஸ்.எம்.ஜஃபர், எம்.ஏ.றமீஸ், றியாஸ் ஆதம், ஐ.ஏ.சிராஜ், றிஸ்வான் சாலிஹ்)

அம்பாறைமாவட்டத்திற்கானஒருங்கிணைப்புக்குழு தலைவர் பதவியையும் கிழக்கு மாகாணத்திற்கு அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி ஒன்றையும் பெற்றுக்கொடுப்பதற்கு உத்தரவாதமளிக்கும் கட்சியோடு இணைந்து செயற்படுவதற்கு தான் தயாராக உள்ளேன் என

நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவரும் பொறியியலாளருமான உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சிலோன் ஊடகவியலாளர் போரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூக சேவையாளர் கௌரவிப்பும் ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வும் அண்மையில் போரத்தின் தலைவரும், அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் செயலாளருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஜஃபர் (ஜே.பி.) தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்குறித்த மிக முக்கியமான இரு பதவிகளையும் மக்களுக்காக பெற்றுக்கொடுப்பதற்கு முன்வருகின்ற சிறுபான்மை அரசியல் கட்சிகளோடு இணைந்து செயற்படுவதற்குத் தயாராக உள்ளேன். அத்தோடு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் ஆயத்தமாகவுள்ளேன். இதனைப் பேரம்பேசி முஸ்லிம்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ள முஸ்லிம் கட்சிகள் தவறுமாக இருந்தால் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டு குறித்த பதவிகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பேன்.

ஊடகவியலாளர்கள் உண்மைகளை எழுதுபவர்களாக இருக்கவேண்டும். அவர்களின் பணிகளை என்றும் பாராட்டுகின்றேன். அதேநேரம் ஊடகவியலாளர்கள் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவரவேண்டும். நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் வறுமைக் கோட்டியின் கீழ் வாழும் மக்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. மக்களை அதிலிருந்து மீட்டு அவர்களுக்குரிய வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் தயாராக உள்ளேன்.

வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனவந்தர்களின் நிதியுதவிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களும் என்னிடமுள்ளன. தற்போது 32 வருடங்கள் சமூகப் பணிகளை மேற்கொண்டுவரும் எனக்கு அரசியல் அதிகாரங்கள் கிடைக்கின்ற போது மேற்குறித்த பணிகளை இலகுவாக முன்னெடுக்க முடியும்.

அரசியல் தலைவர்கள் உறங்க முடியாது. பொய் பித்தலாட்டங்களைச் சொல்லி மக்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது. இப்போது மக்கள் விழிப்படைந்து விட்டார்கள் தேர்தல் காலங்களில் மாத்திரம் வந்து மக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளை வழங்கி வாக்குகளை சூறையாடலாம் என நினைப்பது பகல் கனவாகும். - என்றார்.

(05)

# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய நிர்வாகதெரிவு கூட்டத்தில் சிவசேனை



வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய நிர்வாக தெரிவு கூட்டத்திற்குள் சிவசேனை அமைப்பினர் சென்றமையால் ஆலய பக்தர்கள் எதிர்ப்பு தெரிவித்து வெளியேறியதுடன் பழைய நிர்வாகத்தை தொடரவும் முடிவு எடுத்துள்ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் மாவட்ட மட்ட தெரிவுகளுக்கான பொதுக்கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை ஒலுமடு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆலய பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், ஆலய பக்தர்கள், வேலன் சுவாமிகள், வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தந்தோர் என பலரும் கலந்துகொண்டு கூட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன்போது, சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம், விபுலானந்த சுவாமிகள் உள்ளிட்ட ஒரு குழுவினர் அங்கு வருகை தந்திருந்தனர்.

குறித்த குழுவினர் குருந்தூர்மலை விகாராதிபதியை இரகசியமாக சந்தித்து அதற்கு ஆதரவு தெரிவித்ததாக கூறி, மக்கள் குறித்த குழுவினரை வெறியேறி நிர்வாகத் தெரிவுக்கு ஒத்துழைக்குமாறு கோரினர்.

அத்துடன் சிவசேனை முன்னிலையில் நிர்வாகத் தெரிவு இடம்பெறமாட்டாது எனவும், வெடுக்குநாறி மலையில் பல பிரச்சினைகள் நடந்தும் சிவசேனை அமைப்பினர் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ளவில்லை எனவும் ஓர் அறிக்கை கூட வெளியிடவில்லை எனவும் மக்கள் தெரிவித்ததுடன், அவர்களை வெளியேறுமாறு கோரினர்.





எனினும், சிவசேனை அமைப்பினர் வெளியேறாமையால் ஆத்திரமடைந்த ஆலய நிர்வாகத்தினர் மற்றும் ஆலய பக்தர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறியதுடன், ஒரு வருடத்திற்கு தற்போதைய நிர்வாக சபையே தொடர்ந்து இயங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியதுடன், மக்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

மக்கள் சென்ற பின்னும் சிவசேனை அமைப்பினர் பொது நோக்கு மண்டபத்தில் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (05 - 100)

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக முரளீஸ்வரன்



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராசரெத்தினம் முரளீஸ்வரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, அவர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியை மேலதிகமாக கடமையாற்றவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக, அம்பாந்தோட்டை வலஸ்முல்ல ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராகவிருந்த வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.பி.ஆர்.எஸ்.சந்திரசேன நியமிக்கப்பட்டு அவர் கடந்த 2ஆம் திகதி கடமையேற்றுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்தியர் ஆர்.முரளீஸ்வரன் வியாழக்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சிறப்பாக பணியாற்றி பதவி உயர்வு பெற்று வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்ட வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் கடமையைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் மேலதிக பணிப்பாளராக வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரன் நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் புதிய பணிப்பாளராக கடமையேற்ற வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரனை, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதி பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் ஆர்.நவலோஜிதன் உள்ளிட்ட வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார பணிமனையின் உயரதிகாரிகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் வரவேற்றதைத் தொடர்ந்து அவர் தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளராக கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரன் பதவியுயர்வு பெற்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளராக பதவியேற்றுள்ள நிலையில் குறித்த கடமைக்கு மேலதிகமாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமைப் பொறுப்பை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் கடந்த எட்டு வருடகாலமாக அர்ப்பணிப்புடன் சிறந்த சேவை செய்து வைத்தியசாலையின் பாரிய வளர்ச்சியில் அபரிமிதமான பெரும் பங்காற்றிய டாக்டர் இரா முரளீஸ்வரன் அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் பெரும் நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# ஊடகவியலாளர்களுக்கு அன்பளிப்பு




(எம்.எப்.றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வரும் 'சிலோன் ஜேர்னலிஸ்ட்ஸ்' போரத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.




போரத்தின் தலைவரும், ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம். ஜௌபர் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.சீ.எம். அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர், பொறியியலாளர் யூ.கே.நாபீர் பிரதம அதிதியாகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளச்சேனை அமைப்பாளர் ஏ.கே. அமீர் கௌரவ அதிதியாக கலந்துகொண்டனர்.

சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர் பங்கு பற்றிய நிகழ்வில் பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதி ஆகியோரின் சேவையைப்; பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை கலந்து கொண்ட ஊடகவியலார்களுக்கு அதிதிகளால் அன்பளிப்பு பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2024இல் வெளியிடப்பெற்றது